## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் - 2014

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1974 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் VII ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமங்களுடன் இணங்காமை**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம் 02 இன் பிரகாரம் கையேற்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலம் காணப்படும் நிலையான வைப்புக்கள் மாத்திரம் காசு மற்றும் அதற்கு சமமானதாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆறு மாதங்கள் மற்றும் ஓராண்டு காலப்பகுதிக்குரிய ரூபா 110 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள், காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 **கணக்கீட்டுக் கொள்கைகள்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அளவீட்டிற்காக பின்பற்றப்பட்ட கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐரோப்பிய சங்கத்தின் நிதி உதவிகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்று உடன்படிக்கையின் பிரகாரம் அமுல்படுத்தப்படாமை காரணமாக ஏற்பட்ட நட்டத்தை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,279,398 தொகையை ஐரோப்பிய சங்கத்திற்கு மீளச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும் குறித்த செலவினத்திற்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்திற்குரிய புதிதாக நிர்மாணக்கப்பட்டிருந்த மாலபே நிர்வாகக் கட்டிடம் 2010 யூன் 22 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டு நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 51,259,984 தொகை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிறுவகத்தின் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், பெறுமானத்தேய்வு ரூபா 12,814,996 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக அறவிடமுடியாக்கடன் ரூபா 2,113,792 ஆல் குறைத்து ஏற்டுபாடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அரசின் மானியங்கள் (2002 ஆம் ஆண்டு வரை) மற்றும் திரட்டிய நிதியம் ஒரே குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனம், பொறிகள் மற்றும் ஐந்து உபகரண உருப்படிகளில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிரயமானது, பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரமான கிரயத்தை விட ரூபா 110,220,828 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நான்கு உருப்படிகளில் ரூபா 120,849,885 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்கள் இருப்பு ரூபா 11,816,643 ஆக இருந்ததுடன், பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அந்த இருப்பு ரூபா 11,505,499 ஆக இருந்தமையால் ரூபா 311,144 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரித்தொகை ரூபா 2,475,723 ஆக இருந்த போதிலும், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பிரகாரம் அது ரூபா 10,762,428 ஆக இருந்தமையால் இவ்வேறுபாட்டை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில வருடங்களாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,771,234 இனை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் கீழ் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காகச் செலுத்த வேண்டிய சம்பளமாக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 7,030,873 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 6,980,352 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

திறைசேரி அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்படாமலும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் மீளாய்வாண்டினுள் 10 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைப் படிகளாக ரூபா 150,000 தொகையும் 09 உத்தியோகத்தர்களுக்கு பிரிவுத் தலைவர் படிகளாக ரூபா 396,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 270,226,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 114 ஆம் பிரிவு | உத்தியோகத்தரிடமிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை விட குறைந்த சம்பளம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளை மிகைத்த ரூபா 83,339 தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 160,746 தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 244,085 தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய எம்ஓஎவ்பீ/ஈஆர்டீ/2011/1 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றறிக்கை | வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு அறிவிக்காமல் ரூபா 38,469,075 பெறுமதியான கனடா செயற்திட்டம் மற்றும் ரூபா 49,999,319 பெறுமதியான இந்திய, இலங்கை செயற்திட்டம் முறையே 2012 ஏப்ரல் மாதத்தின் போதும் 2013 செப்தெம்பர் மாதத்தின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் மெய்மையாய்விற்காக 07 உத்தியோகத்தர்களுடன் கூடிய பொருள் மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 13,581,898 பெறுமதியான கணனி மென்பொருள் மற்றும் உப பாகங்கள் மற்றும் ரூபா 4,512,594 பெறுமதியான ஏனைய சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை | |
| | (i) 1 ஆம் பிரிவு | மதியுரைச் சேவைக்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 7.1 ஆம் பிரிவு | மதியுரைச் சேவை வருமானத்தில் நேர்க் கிரயம் கழிக்கப்பட்ட பின்னர் 10 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரையான தொகை நிறுவனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டு திறைசேரியின் விசேட நிதியத்திற்கு 03 மாதங்களுக்கு ஒரு தடவை அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) | 2004 பெப்ரவரி 11 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈஆர்எஸ்ரீ/21-4/பதிப்பு ii ஆம் இலக்க முகாமைத்துவ சேவை பணிப்பாளரின் கடிதம் | ஒரு உத்தியோகத்தருக்கு இரண்டு மாதச் சம்பளம் அல்லது ரூபா 20,000 ஆகிய இரண்டில் குறைந்த பெறுமானம் ஊக்குவிப்பு படியாக வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிகாரம் மீளாய்வாண்டிற்காக 358 உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய ஊக்குவிப்பு படி ரூபா 7,160,000 ஆக இருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட ரூபா 1,060,000 கூடுதலாக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கை இலக்கம் 08, 5-6.1(இ) | கொள்வனவு செய்வதற்குள்ள பொருட்கள் அல்லது வேலைகளுக்காக விதந்துரைப்புக்களில் அவற்றின் வியாபாரப் பெயர், கட்லொக் இலக்கம் அல்லது உற்பத்தி செய்த நாடு குறிப்பிடப்படக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக வியாபார நிறுவனம் குறிப்பிடப்பட்டு கொள்வனவு செய்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 55,698,487 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 39,177,699 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,520,788 அதிகரிப்பினைக் காண்பித்தது. இதற்காக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் இலாபம் 11 சதவீதத்தினால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிறுவகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) TG – 11/58 ஆம் இலக்க செயற்திட்டம் 60 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டமொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இரண்டு செயற்திட்டங்கள் அத்திகதியில் பௌதீக செயன் முன்னேற்றம் 75 சதவீதம் மற்றும் 63 சதவீதமாக இருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ செவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2014 இன் 06 (iii) இன் பிரகாரம் செலுத்தப்படும் ஆராய்ச்சிக் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிரந்தர கடமையை பாதிக்காத வகையில் மேலதிக ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின்

ஆராய்ச்சிகளுக்குரித்தாக நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 9,420,957 தொகையான ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) தேசிய ஆராய்ச்சி சபையால் வழங்கப்படுகின்ற மானியங்கள் அடிப்படையில் ரூபா 28,714,000 ஆன பாதிடப்பட்ட பெறுமதியுடன் கூடிய 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறுவகத்தில் செயற்படுத்தப்பட்டிருந்தன. இங்கு ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் தேசிய ஆராய்ச்சி சபைக்கு இடையே உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிதியங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் செயற்திட்டத்தை வழிநடாத்துதல் அந்தந்த பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மூலம், உயர் முகாமைத்துவத்தின் பங்களிப்புடனும் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிறுவகத்தின் பொருட்கள், உழைப்பு மற்றும் பொது மேந்தலைக் கிரயம் என்பன அச்செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்துடன், அதற்குரிய எந்தவொரு நிதி அல்லது பௌதீக நலனொன்று நிறுவகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) நிறுவகம் அறிமுகப்படுத்தியுள்ள கணனி நிகழ்ச்சித்திட்ட முறைமை மிகவும் சிக்கலான முறைமையாக இருந்தமையால் கணக்கீடு மற்றும் அதனைக் கணக்காய்வு செய்வது மிகவும் கடினமான விடயமாக இருந்தது.

(ஈ) சேவை நாடுனருக்கு கொடுப்பனவிற்காக கடன்பத்திர வசதிகளை வழங்கும் போது வங்கி அறவிட்ட தரகினை சேவை நாடுனரிடம் அறவிடாமல் நிறுவகத்தினால் கொடுப்பனவு செய்த காரணத்தினால் ரூபா 62,248 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) அரசிறை பெற்றுக்கொள்ளும் போது சான்றுதிப்படுத்தப்படாத கணக்கு அடிப்படையில் அரசிறையைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசிறையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனமொன்றிலிருந்து அரசிறையைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்காமையால் நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஊ) மாலாபே நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது அளவீட்டுப் பத்திரத்தில் காணப்படும் அளவு மற்றும் அளவீடுகளுக்கு புறம்பாக ரூபா 4,547,590 தொகை மற்றும் இறுதிக் கொடுப்பனவின் போது ரூபா 8,384,036 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 17 உத்தியோகத்தர்கள் நிரந்தரமாகவும் 44 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், வெற்றிடங்கள் காணப்பட்ட பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்காமல் 6 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தரொருவர் ஆகக் குறைந்த தகைமையேனும் பூர்த்தி செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன், அத்தியவசிய சிரேஷ்ட மட்ட பதவிகளில் காணப்பட்ட 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பயன்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,820,645 கூட்டுத்தொகையான 04 வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பேணப்பட்டு சென்றிருந்ததுடன், அந்த நிதி மீளாய்வாண்டின் போதும் பயனுள்ள நடவடிக்கையொன்றுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாலாபே நிர்வாகக் கட்டிடம் ரூபா 51,259,984 தொகை செலவு செய்து நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், எதுவித நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி சேவைகளுக்கு விலையிடுவதற்காக நிரந்தர கிரய முறைமையொன்றை ஏற்படுத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 350,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அம்முறைமையை பின்பற்றாமல் முன்னரைப் போன்றே விலையிடல் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நிறுவகத்தின் ஆய்வுகூட தராதரங்கள் சர்வதேச அங்கீகாரமொன்று உள்ள நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளபட வேண்டியிருந்ததால் அச்செயற்பாடு இரண்டு நிறுவனங்களைக் கொண்டு மேற்கொண்டமையால் ரூபா 4,426,671 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பீஈடீ/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04(இ) பந்தியின் பிரகாரம் செயற்படுத்தப்பட்ட கால அட்டவணை மற்றும் அச்செயற்பாடுகளில் எதிர்பார்த்த முடிவு அல்லது பெறுபேறுகள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளபடியான வருமானங்களையும் செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 10 சதவீதம் தொடக்கம் 263 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடானது வினைத்திறனை முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**5.3 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2011 ஆம் ஆண்டு மே 30 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் கட்டளை இலக்கம் 16 இன் பிரகாரம் வெளிநாட்டு புலமைப் பரிசில் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட

வேண்டிய ரூபா 7,810,032 தொகை கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே முரணொன்று காணப்பட்டது. |
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | - | பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமானம் இணங்காமை. |
| (இ) | கணக்கீடு | - | கட்டுப்பாட்டுக் கணக்கைப் பேணுவதில் பலவீனங்கள், பேரேட்டுக் கணக்குகள் நிதிக்கூற்றுக்களுடன் இணங்காமை மற்றும் ஆண்டிற்குரிய சில செலவினங்கள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன. |
| (ஈ) | கொள்வனவு | - | வழிகாட்டிக்கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | மனித வள முகாமைத்துவம் | - | வெற்றிடங்கள் காணப்படுதல் மற்றும் படிகள் கூடுதலாகச் செலுத்துதல். |